OS 39/2024
வா.சா.1 செல்வி க/பெ வெங்கடேசன்
நாள் 07.10.2025

**குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்து 5 பாகமாக பிரித்து ஒரு பாகம் எனக்கு வேண்டும் என்று 2019ம் வருட பாகப்பிரிவினை பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சுப்பிரமணி என்பவர் எனது அப்பா ஆவார். எனது அப்பா 10.12.2013ல் இறந்து விட்டார். குப்பம்மாள் என்பவர் எனது தாயார் ஆவார். எனது பெற்றோருக்கு நான் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் மகள்கள் என்றால் சரிதான். பழனி என்பவர் ஒரே ஆண் வாரிசு என்றால் சரிதான். அவர் பாம்பு கடித்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது அப்பா இறந்து 5 மாதங்கள் கழித்து பழனி இறந்துவிட்டார் என்றால் சரிதான். இறந்த பழனியின் வாரிசுகள் தான் 4 முதல் 7 பிரதிவாதிகள் என்றால் சரிதான். வழக்கு சொத்துகளை எனது அப்பா விவசாயம் செய்து அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். எனது அப்பா வெளியே கடன் வாங்கி அந்த நிலத்தில் போர் போட்டார் என்றால் கடன் வாங்கவில்லை. நிலத்தை விற்பனை செய்து போர் போட்டார்.

2. நிலத்தை விற்பனை செய்து வீடு கட்டினார், போர் போட்டார், மகள்கள் மற்றும் மகனுக்கு திருமணம் செய்து வைத்தார். பழனி அவரது அக்கா மஞ்சுளா என்பவரின் மகளை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எனது அப்பா உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் இருந்த போது பழனி தான் உடன் இருந்து செலவு செய்து பார்த்துக் கொண்டார் என்றால் சரிதான். எனது அப்பா போர் போட வாங்கிய கடனை மருமகள் தான் கூலி வேலை செய்த வருமானத்திலும் அவரது தந்தையிடம் இருந்து பெற்ற தொகை கொண்டும் அடைத்தார் என்றால் சரியல்ல. கௌரி கடனை திருப்பி செலுத்தியதால் அந்த கடனுக்குண்டான பாண்டுகளை அவரிடம் தான் கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது தம்பி இறந்ததால் பெரியவர்கள் முன்னிலையில் பாகம் செய்ய பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு பஞ்சாயத்து பேசப்பட்டு 18.12.2019 பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

3. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் படிக்கவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு நான் தான் எனது வழக்கறிஞரிடம் 2019 பாகப்பிரிவினை ஆவணத்தை கொடுத்தேன் என்றால் சரிதான். 2019 பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள விவரங்களை எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பாகப்பிரிவனை பத்திரத்தில் சொத்து விவரத்தில் சாந்தி, செல்வி பாகம் போக என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரத்தை எனது வழக்கறிஞர் சொன்னாரா என்றால் சொன்னார். அந்த ஆவணத்தில் மஞ்சுளா, வள்ளி பணம் பெற்றுக்கொண்டதாக விவரம் உள்ளது என்றால் பணம் பெற்ற விவரம் எனக்கு தெரியாது. பாகம் பிரித்துக்கொள்ள பஞ்சாயத்து பேசிய போது நான் தான் வரவில்லை என்றால் சரியல்ல. நானும் சாந்தியும் பஞ்சாயத்துக்கு வரவில்லை என்பதால் தான் எங்கள் இருவருக்கான பாகம் ஒதுக்கி வைத்து மற்றவருக்கு பாகப்பிரிவினை ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல.

4. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 4வது பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. மற்ற பாகஸ்தர்களுக்கு அறிவிப்பு அனுப்பாமல் 4ம் பிரதிவாதிக்கு மட்டும் ஏன் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் எனது அப்பா சொத்தை என் தம்பியின் மனைவிக்கு எழுதியதால் அறிவிப்பு அனுப்பினேன். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு நான் தான் விவரங்களை வழக்கறிஞரிடம் சொன்னேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 வழக்கறிஞர் அறிவிப்பை மஞ்சுளா, வள்ளி பணம் பெற்றுக்கொண்டதால் அவர்களை தவிர்த்து 3ல் 1 பாகம் கேட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தில் மஞ்சுளா, வள்ளி பாகத்தை விட்டு விட்டு பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேனா என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரம் குறித்து நான் வழக்கறிஞர் அறிவிப்பில் ஒப்புக்கொண்டுள்ளதால் 2019 பாகப்பிரிவினை ஆவணம் குறித்து நான் செல்லாது என்ற பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

5. 2019பாகப் பிரிவினை பத்திரத்தை நீக்கம் செய்ய வேண்டும் என்று கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. காலம் கடந்து பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கோரியிருப்பதால் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அப்பாகுட்டி என்பவர் என் அப்பாவின் அப்பா என்றால் சரிதான். சர்வே எண்.499/5 அப்பாகுட்டி பெயரில் இருப்பதால் அந்த சொத்தையும் இந்த வழக்கில் சேர்த்திருக்க வேண்டும் என்றால் அப்பா பெயரில் உள்ள சொத்தை மட்டும் சேர்த்திருக்கிறேன். பாகப் பிரிவினை பத்திரத்தில் எனக்கும் சாந்திக்கும் பாகத்தை ஒதுக்கிவிட்டு தான் பத்திரம் எழுதப்பட்டுள்ளது எனவே, புதியதாக பாகம் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கு சொத்துகள் எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் சார் பதிவாளர் மீது வழக்கு மூலம் இல்லாமல் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. சார் பதிவாளர் அரசு பணி செய்யும் அலுவலர் என்பதால் அவருக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.